29 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 6-4-33

" காந்திஜியே! கண்டீரா "?



எரவாடா சிறையில் தூர திருஷ்டிக் கண்ணாடி மூலமாக ஆகாயத்திலுள்ள விண்மீன்களையும், கிரகங்களையும், கிரகசாரங்களையும் காந்திஜி பார்த்துக் கொண்டிருக்கிறாராம். உலகின் ராஜீய வானத்தில் இன்று ஏற்பட்டுள்ள கிரகசாரங்களை, காந்தியடிகளே! கண்டீரா? இத்தாலியில் முஸோலினி, ஜர்மனியில் ஹிட்லர், இனி இந்தியாவில் வைஸ்ராய்; இந்த கிரகங்கள் ஸர்வாதிகாரம் செலுத்துவது மேற்படி கண்ணாடியில் தெரிகின்றதா?

டெல்லி தலையரட்டைகள்

டெல்லி சட்ட சபை, வரவர மாமியார் கதை யாக ஆகி விட்டது. காந்திஜியை விடுதலை செய்ய வேண்டு மென்றும், காங்கிரஸை சர்க் கார் தடுப்பானேனென்றும், யாராரோ கேள்வி கள் கேட்டு குட்டையைக் குழப்பிப் பாழ் செய்திருக்கிறார்கள். இத்தகைய கேள்விகளைக் கேட்டால் தங்களையும் தேச பக்தர்களென உல கம் நம்பி விடும் என்று நினைத்துக் கொண் டார்கள் போலும். சர்க்காரிடமிருந்து எத்த கைய பதில்கள் வரும் என்பது கேள்வி கேட்ட வர்களுக்குத் தெரியாதா? அதை ஊகிக்கத் திறமை தான் இல்லையா? அறிந்திருந்தும் இந் தக் கேள்விகளைக் கேட்பானேன்? அதற்குத் திமிராக சர்க்கார் பதில் சொல்வதற்கு இடந் தருவானேன்? இதனால் பொது ஜனங்கள் மனம் புண்ணடையுமாறு ஏன் செய்ய வேண் டும்?

"காங்கிரஸ் வீரர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்வதென்றால் அவர்கள், 'சட்ட மறுப்பை விட்டு விட்டோம்' என்று வாக் குறுதி தர வேண்டும்" என்று சர்க்கார் அதிகாரி கூறினார். இது நடக்கக்கூடிய சமா சாரமா? காங்கிரஸ் வீரர்கள் இத்தகைய நிபந் தனைக்கு உட்படுவார்களா? சிறையிலேயே கிடந்து சாவதற்கும் துணிந்துள்ள ஓர் வீரர் கூட்டத்தினரைப் பற்றிப் பேசுகின்றோமென் பதை இந்த சர்க்கார் மந்திரி மறந்து விட்டார் போலும்! ஒட்டாவா வீரர்களிடமும், ஜினிவா வீரர்களிடமும், கூட்டுக் கமிட்டி வீரர்களிடமும் பேசுகின்ற தோரணை, காங்கிரஸ்காரர்களிடம் பிரயோசனப் படாது என்பதை இன்னமும் சர்க்கார் அறிந்து கொள்ள வில்லையா? இந்த மாதிரி பிடிவாதக் குரலோடு சர்க்காரின் தொனி கேட்டுக் கொண்டிருந்தால், நாட்டில் சமாதானம் ஏற்படுவது குதிரைக் கொம்பு போலத் தான்!

இடையிலே டெல்லியில் ஒரு வதந்தி உலவிக் கொண்டிருக்கிறது. வைஸ்ராய் வில்லிங்டன் தமது வயோதிகம் காரணமாக உத்தியோ கத்தை ராஜினாமா கொடுத்துவிட்டு ஊருக்குப் போகப் போகிறாராம். குஷாலாய்ப் போகட் டும்! ஆனால் இந்தியாவில் அமைதி யின்மையை ஏற்படுத்தி விட்டு, சமாதான முண்டாக்க வழி அறியாது ஓடிப்போனவரென்றே இவர் கருதப் படுவா ரென்பதை சொல்லத் தேவையில்லை.

தலை வலி போய் திருகு வலியா?

"இந்தியாவினின்று பிரிட்டிஷார் என்றே னும் ஒரு நாள் விலகப் போகிறார்கள். அந்த நாள் வெகு தூரத்திலில்லை. ஆனால் பிரிட்டி ஷார் அகன்ற அன்றைய தினத்திலேயே இந்தி யாவை தனது சந்தையாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று ஜப்பான் ஆலோசித்திருக் கிறது. சைனாவில் தனது சரக்குகள் விற்பனை யாகாது போகவே அவ்வளவையும் இந்தியா வில் கொணர்ந்து திணித்து விற்பதற்கு ஜப் பான் இப்போது பாடுபட்டு வருகிறது. ஆகவே இந்திய தேசபக்தர்கள் உஷாரா யிருக்கவேண் டும். ஜப்பான் சாமான்களையும் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று சீன ராஜாங்கத்து மந்திரி யான இயூஜன்-சென் என்பவர் சொல்லி யிருக் கின்றார். தலை வலியை போக விட்டு திருகுவலி யை எவரும் வரவேற்க மாட்டார்கள். பிரிட்டி ஷார்இந்தியாவை விட்டுப் போன பின்பு ஜப்பா னல்ல, வேறு எந்த அந்நியருக்கும் இந்தியர் இனி விட்டுக் கொடுக்க மாட்டாரென்பதை நாமறிவோம். அந்நிய ஆதிக்கங்களின் கீழி ருந்து இந்தியா பட்ட கஷ்டம் போதாதா?

புரோகிதப் பரீக்ஷை

காசி ஹிந்து சர்வ கலாசாலை ஒரு புதிய பரீக்ஷையை நடத்துவ தென்று தீர்மானித் திருக்கிறது. ஹிந்துக்களின் வீடுகளில் புரோ கிதம் செய்து வைக்கிறவர்களில் அநேகருக்கு சாஸ்திர ஞானத்தில் சிரத்தை ஏற்படுத்துவதற் காக அந்தப் பரீக்ஷை நடத்தப்படும். கர்ம காண்டம், ஜோதிஷம், சிராத்த மந்திரம், முத லியவைகளில் கேள்விகள் கேட்கப்படுமாம். பெரிய பண்டிதர்கள் இந்தப் பரீக்ஷைக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். இந்தப் பரீ க்ஷைக்கு தென்னாட்டியிருந்து எத்தனை புரோ கிதர்கள் போவார்கள்? போனால் எத்தனை பேர் 'பாஸ்' பண்ணுவார்கள்?

ஸ்ரீயுத ராமச்சந்திர கனபாடிகள் என்ற நண் பர் செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகத்துக் கடுத்த கருங்குழி கிராமத்தில் 6 ஏகரா பூமியை வாங்கி ஹரிஜனங்களுக்குக் குடி யிருக்க வீடு கட்டித் தரப் போகிறாராம். பொதுஜன உதவி யைக் கொண்டு ஒரு கோயில், ஒரு ஆஸ்பத் திரி, ஒரு பள்ளிக்கூடம், ஒரு தொழிற் சாலை முதலியவைகளை பக்கத்திலேற்படுத்தப் போ கிறாராம். —'ஹரிஜன்' பத்திரிகை.

ஜேய்! ஜாலியன்வாலா!

பாரத நாட்டின் சுதந்திர யாகத்தில் முதற் பலி கொடுக்கப்பட்ட இடம் ஜாலியன்வாலாத் தோட்டமாகும். ஜாலியன்வாலாத் தோட்டம், அமிருதசரஸ் என்ற ஊரில் இருக்கின்றது. ஹிந்துக்களுக்குக் காசியும், கிறிஸ்தவர்களுக்கு எருசலேமும் இருப்பதே போன்று இந்திய தேச பக்தர்களுக்கு ஜாலியன்வாலாத் தோட்டம் ஒரு புண்ணிய க்ஷேத்ரமாக இருந்து வருகிறது. அங்குள்ள செம்மண்ணின் மீது பதினான்கு வருஷங்களுக்கு முன்னே தியாகிகளின் இரத்தம் ஓடிற்று. தியாகிகளின் இரத்தம் உலகில் வீண் போகுமா? இன்று பாரத நாட்டில் இவ்வளவு தேச பக்தியும், இவ்வளவு சுதந்திர ஆசையும், துடிதுடிப்பும் இருப்பதற்கு அந்தத் தியாகிகளின் இரத்தமே காரணமாகும்.

1919ம் ஹு த்தில் எப்ரல் மாதம் ஆறும் தேதியை, இந்தியர் சத்தியாக்கிரக தினமாகக் கொண்டாடினர். லக்ஷம் லக்ஷமாக ஆங்காங்கு மக்கள் கூடி துர்ப்பாக்கியத்திலுள்ள பாரத நாட்டுக்கு சுதந்திரம் அருள வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்தித்தனர். அமிருதசரஸ் என்ற ஊரிலும் அன்று பிரும்மாண்டமான ஓர் கூட்டம் நடந்தது. ஆனால் அமிருதசரஸிலிருந்த திமிர் பிடித்த அதிகாரிகளின் கண்களை இந்த அஹிம்சா தர்ம இயக்கம் உறுத்திற்று.

அப்போது பஞ்சாப் கவர்னராயிருந்தவனின் பெயர் மைக்கேல் ஒட்வியர்; மிருக பலத்தின் தாசன்; 'சத்தியாக்கிரகம்' என்ற புனிதச் சொல் அவனுக்குச் சிவப்புத் துணியாயிருந்தது. அவனுடைய சில்லுண்டி தேவதைகள் தலைகால் தெரியாது அமிருதசரஸில் அட்டகாசம் செய்யத் தலைப்பட்டனர். பஞ்சாபியர்களின் கோபம் வரவர முற்றிக் கொண்டிருந்தது. அமிர்த சரசில் அஹிம்ஸா தர்மத்துக்குப் பங்கம் வந்து விடுமோவென்று மகாத்மா பயந்தார். சாந்தமென்னும் ஒளி பரப்புவதற்காக அவர் பஞ்சாபுக்குப் புறப்பட்டார். ஆனால் அவர் பஞ்சாபில் நுழையக் கூடாதென அதிகாரவர்க்கம் தடுத்து விட்டது. அன்று 1919ம் ஹு ஏப்ரல் மீ 8-ந் தேதியாகும்.

மறுநாள் ஸ்ரீராமநவமியன்று அமிருதசரசின் அரும்பெருந் தலைவர்களான கிச்சுலு, ஸத்தியபால் என்ற இருவரையும் அதிகாரிகள் சிறையிலிட்டனர். தேசம் போற்றும் உத்தமரான காந்தி மகான் அமிருதசரஸில் நுழையக் கூடாதென தடுத்ததும், உள்ளூர்த் தலைவர்களை அனாவசியமாக ஜெயிலில் தள்ளி அடைத்ததும் பஞ்சாபியருக்கு கோப மூட்டாமலிருக்குமா? அன்றிருந்து ஊரின் அமைதி அடியோடு கலைந்து போயிற்று. கலவரங்கள் நடக்க ஆரம்பித்தன.

அமைதியைக் காப்பதற்கென்று ஒரு அதிகாரி தனது படையோடு அமிருதசரஸுக்கு வந்தான். துப்பாக்கிகளைக் காட்டி மக்களை பயமுறுத்திக் கொண்டு அவனது படை அமிருதசரஸ் வீதியில் நடை பயின்றது. தெருக்களில் பூட்ஸுச் சந்தமும், பீரங்கி வண்டியின் சந்தமும் காதைத் தொளைத்தன! அந்த கெடுபிடி ராஜ்யம் நடத்தியவன் பெயரை இந்தியாவில் சின்னக் குழந்தையும் அறியும். அவன் தான் ஜனரல் டயர்!

நடுநடுங்கிப் போன அமிருதசரஸ் வாசிகள் என்ன நடக்குமோவென்று ஏங்கிக் கொண்டிருந்தனர். "ஜாலியன்வாலாத் தோட்டத்தில் கண்டனக் கூட்டமாம்" என்று ஓர் வதந்தி புறப்பட்டது. மருண்டு போயிருந்த மக்கள் பதினாயிரக் கணக்கில் அன்று ஜாலியன்வாலாத் தோட்டத்தில் கூடி விட்டனர்.

ஜாலியன்வாலாத் தோட்டம் என்பது ஓர் சிறிய மைதானம். அதற்குள் போவதற்கும் வருவதற்கும் ஒரே ஒரு பாதைதான் உண்டு. என்ன ஆபத்து தங்கட்குக் காத்திருக்கிறதென்பதை அறியாமல் இருபதினாயிரம் மக்கள் 13உ யன்று அங்கு கூடி விட்டனர்.

திடீரென்று ஜெனரல் டயர் தோட்ட வாசலண்டை வந்தான். 90 சிப்பாய்களோடும், பீரங்கி வண்டிகளோடும் அந்தப் பாவி நின்று உறுமினான். நிராயுதபாணிகளாக நின்றிருந்த மக்களின் மேல் குண்டு மழை பொழியுமாறு சிப்பாய்களுக்கு உத்தரவு கொடுத்தான்.

பூம்! பூம்! குண்டு மழை! ஐயோ ஐயோவென்ற கூக்குரல். எங்கே ஓடுவது? தோட்டத்திற்கு ஒரே வழிதானே! அந்த வழியையும் பாவி அடைத்துக் கொண்டு நிற்கின்றானே? கூட்டத்தில் குழந்தைகளுமிருந்தன. கூட்டம் அலை மோதிற்று. பல குழந்தைகள் மிதிபட்டு இறந்தன. எங்கு பார்த்தாலும் இரத்தம்! மண்டைகள் பிளந்தன. மார்புகள் கிழிந்தன! இவ்வாறாகத் தனது இரத்த வெறி அடங்கும் வரை, கை அலுக்கும் வரை, கையிலிருந்த குண்டுகள் அத்தனையும் செலவாகும் வரை பாவி டயர் சுட்டுத் தீர்த்தான். 1650 குண்டுகள் அன்று தீர்க்கப்பட்டன. நிராயுதபாணிகளில் சுமார் 500 பேரைக் கொன்று, ஆயிரக்

கணக்கான பேர்வழிகளைக் காயப்படுத்திய பின்பு தான் அவனது வெறி தீர்ந்தது.

அந்தச் சமயத்தில் அந்த ஜாலியன் தோட்டம் எவ்வாறிருந்தது என்று மனத்தாலும் எண்ண முடியவில்லையே, என் செய்வது? கை போனவர்களும், கால் போனவர்களும், நகர முடியாமல் அலறிக் கொண்டு கிடந்தனர். "தாகம் தாகம்!" என்று மரண தாகத்தால் கதறி உயிர் விட்டவர் எத்தனையோ பேர்! கண்களை இழந்து வழி தெரியாது புழுப் போல பூமியில் நகர்ந்து கொண்டிருந்தவர் பல பேர்! இப்படியாக ஏப்ரல் 13-ம் தேதியன்று சுதந்திர யாகத்தின் ஆரம்பம் போல நூற்றுக் கணக்கான உயிர்கள் பலி கொடுக்கப்பட்டன. அந்த ஜெனரல் டயரின் பயங்கர ஆட்சி அன்றோடு ஓய்ந்து போகவில்லை. பிறகு 2 மாத காலம் கொட்டம் அடித்தான். தெருக்களில் ஊர்ந்து செல்லுமாறும், முட்டைகளைச் சுமக்குமாறும், ஸலாம் செய்யுமாறும் மனம் போனவாறு ஜனங்களைக் கட்டளை யிட்டான். சவுக்கடியும் துப்பாக்கிச் சனியன் குத்தும் அமிர்த சரவில் அமுலி பட்டது. இதுதான் பஞ்சாப் படுகொலையின் சரிதை.

அந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு வருடத்திலும் ஏப்ரல் 6-ம் தேதியையும், 13-ம் தேதியையும் பாரத மக்கள் கொண்டாடி வருகின்றனர். இடையிலுள்ள 7 நாட்களை 'தேசிய வார'மென அழைக்கின்றனர். ஆளப்படும் மக்களை ஆளுகின்ற அரசாங்க வர்க்கம் கொன்று குவிப்பது முண்டா? பஞ்சாப் படுகொலையைப் போல வேறெந்த நாட்டிலும் பெருங் கொலை நிகழ்ந்ததில்லை. துர்ப்பாக்கிய இந்தியாவில் தான் அது நடந்தது. ஆனால் அந்தத் தியாகிகளின் இரத்தம் வீண் போகவில்லை. பாரத நாட்டின் சுதந்திர வித்துக்கு அந்த இரத்தம் பாய்ச்சப்பட்டு சுதந்திரச் செடி வளர்ந்து வருகிறது. துயரங்களை யெல்லாம் சகித்துக் கொள்ளும் ஆற்றலை தங்கள் சாவினால் அந்தத் தியாகிகள் புகட்டிச் சென்றனர். ஆகவே ஜேய் ஜாலியன் வாலாபாக்! வந்தே மாதரம்!

உபவாஸம்

கிறிஸ்தவர்களில், தீண்டாதாருக் கென்று கத்தோலிக்கர் கோவில்களில், ஒரு பாகம் மூங்கில் கட்டி ஒதுக்கி வைப்பதை ஆக்ஷேபித்து, அது ஒழிய வேண்டு மென்று திருச்சியில் அந்தோனி சாமி யென்பவர் உபவாஸ மிருக்கிறாராம்.

பாரத நாடு உய்யும் வழி

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

நாட்டில் கோழைத்தனம் போகவேண்டும்; தீரம் உண்டாக வேண்டும்; சுயநல புத்தி ஒழியவேண்டும்; தேச சேவையில் உணர்ச்சி ஊறவேண்டும்; மடமைகளும் மூட நம்பிக்கைகளும் ஒழிந்து அறிவும் உண்மையும் பிரகாசிக்கவேண்டும்; ஸமூகத்திலுள்ள அடிமைத்தனங்களை, அவை 'பழசாயினும்' 'புதுசாயினும்', ஒழித்தே தீர்க்கவேண்டும்.

ஆதிகால முதல் நாம் குடிசைகளில் செய்யப்பட்ட சாமான்களைத்தான் வாங்கிக் கொண்டிருந்தோம். பிறகு கெட்டிக்காரர்களான அந்நிய நாட்டார்கள் மெஷினில் செய்யப்பட்ட சரக்குகளை மலிவாக விற்கத் தொடங்கினர். பிறகு 'சுதேசி' யியக்கம் தோன்றிற்று. ஆனால் இவை இரண்டும் ஏழைக் கிராமவாசியின் ஜீவனத்தில் மண்ணை அடித்து விட்டன. நமது கிராமங்களின் கொரமான வறுமை நிலையைப்பற்றி சிறிதாவது சிந்தியாமல் 'ஷோக்'கான சாமான்களின்மீதும் மலிவான சாமான்களின் மீதும் நாம் சிந்தை செலுத்துவது சரியா?

நமது தாய் நாட்டிடத்து அன்பு காட்டுவதற்கு அறிகுறி எது? கதர் கட்டுவதுதான். அது மட்டு மன்று. ஏழைகளிடத்தில் யார் யாருக்குத் தயாள சிந்தையுண்டோ அவர்களெல்லாரும் கதர் அணிந்தே யாகவேண்டும். இந்தியப் பணத்தை இந்தியாவிலேயே இருக்குமாறு மில் துணி செய்து கொண்டிருக்கலாம். ஆனால் கிராமங்களில் அநேக கோடிக்கணக்கான ஏழைகள் கஷ்டப்படுகின்றனரே, அவர்களை எப்படிக் காப்பது? கதர் தானே கஞ்சி வார்ப்பது!

மில் துணியைவிட கதரின் விலை ஜாஸ்தி தான். ஜப்பான் துணியோடு ஒப்பிட்டால் கதர் விலை இன்னும் ஜாஸ்தி தான். ஆனால் கதருக்கு நாம் தரும் அதிகப் பணம் எங்கே போகிறது? வேலையில்லாது திண்டாடும் மக்களுக்கு கூலியாகத்தான் அது போகிறது. இதர தேசங்களில் வேலையில்லாத மக்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்கின்றதைப் பார்க்கின்றோம். அதே மாதிரி 'தர்மம் செய்ய வரி' யென்று நினைத்துக் கொண்டு நாம் கதர் வாங்கி உதவி செய்யலாகாதா, என்ன? கதர்க் கடைகளில் வியாபாரம் தூங்குவதாகப் புகார் சொல்லுகிறார்கள். நமது இதர செலவுகளை நிறுத்தி விட்டு உடனே அப்பணத்தைக் கொண்டு கதர் வாங்குவதே நாட்டைக் காக்கும் வழியாகும்!

எச்சில் இலைச் சோறு

(மகாத்மா காந்தி)

டேராடூன் காலேஜ் ஹாஸ்டலிலிருந்து ஒரு மாணவர் ஒரு கடிதம் எழுதி யிருக்கின்றார்.

"எங்கள் ஹாஸ்டலில் எறியப்படும் எச்சில் இலைகளை எடுத்து, அதிலுள்ளவைகளை தோட்டிகள் சாப்பிடுவது வழக்கமா யிருந்தது. புதிய ஆதர்சத்தின் பயனாக நாங்கள் அவ்வழக்கத்தை நிறுத்தி விட்டோம். தோட்டிகளுக் கென்று பிரத்தியேகமாக ரொட்டியும் பருப்பும், தயார் செய்து கொடுக்கத் தொடங்கினோம். அவர்களுக்கு இந்தப் புதிய ஏற்பாடு பிடிக்கவில்லையாம். எச்சில் இலைகளில் கிடைக்கும் நெய் முதலியன, புதிய சாப்பாட்டில் கிடைக்கவில்லையென்று புகார் சொல்கிறார்கள். ஆகவே வேறு எங்கேயாவது எச்சில் பொறுக்குவார்களானால் என் செய்வது" என்பதே அக் கடிதம்.

இது ஒரு சங்கடமான நிலைமைதான். ஹரிஜனங்கள் எச்சிலை யெடுத்துத் தின்று தின்று பழகிப்போய் விட்டனர். எச்சில் கிடைக்கவில்லையே யென்று ஏங்குகின்ற கூட்டமும் இருக்கின்றது. இது எதைக் காட்டுகின்றது? நம்மைப் போன்ற 'மேல் ஜாதி' ஹிந்துக்களின் புத்தியும் ஹரிஜனங்களின் புத்தியும் தாழ்ச்சி யடைந்திருப்பதையே காட்டுகின்றது.

ஆகவே ஹாஸ்டல் மாணவர்களுக்கு ஒரு வார்த்தை. அன்றாடம் ஹாஸ்டலில் சமையல் ஆனவுடன் அதில் ஒரு பகுதியை அப்படியே எடுத்துத் தோட்டிகளுக்கென்று ஒதுக்கி வைத்து விட வேண்டும். பணம் அதிகமாகச் செலவாகி விடுமேயென்று மாணவர்கள் யோசிக்கலாம். ஆனால் நமது நாட்டின் 'ஹாஸ்டல்' வாழ்க்கையைப்பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். நமது மாணவர்கள் அனாவசியமாக, அளவுக்கு மிஞ்சி 'ஷோக்கு' வஸ்துக்களில் காசை விரயம் செய்து வருகிறார்கள். சாப்பிட்டவுடன் இலையில் நிறைய எறிந்து விட்டு எழுந்திருப்பது ஒரு கவுரவமென்று நினைக்கின்றவர்களும் உண்டு. இவ்வாறு இலையில் மிச்சம் வைப்பது அவமானமென்றும், ஏழைகளுக்குத் தீங்கு விளைவிப்பதென்றும் நான் சொல்கின்றேன். அளவுக்கு அதிகமாக ஏன் ஒருவன் இலையில் கொட்டிக் கொள்ளவேண்டும்? அதுவும் மாணவர்களா இவ்வாறு செய்வது? நாக்கை வளர்ப்பதுதானா மாணவர்கள் வேலை? நாவை அடக்கிச் சுத்தமாக வாழக் கற்றுக்கொள்வது தான் மாணவ வாழ்க்கை. இலையில் எறியாமல் சாப்பிடப் பழகுவதுதான் சுத்தமானது. தங்களது அனாவசியச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு தாங்கள் உண்பதில் ஒரு பகுதியை தோட்டிகளுக்குத் தருவது தான் மாணவர்கள் கடமை.

—'ஹரிஜனம்'.

விடுமுறை நாட்களில்

(மகாத்மா காந்தி)

விடுமுறை நாட்களை எவ்வாறு செலவிடுவது என்று அந்த மாணவர் கேட்டிருக்கின்றார். தேசத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கமுடைய மாணவர்களுக்கு ஏராளமான வேலை இருக்கின்றது. சிலவற்றைச் சொல்கின்றேன்.

1. பகலிலும் இரவிலும் கிராமங்களில் பள்ளிக்கூடங்களை நடத்தலாம். எவ்வளவு நாளைக்கு விடுமுறைக் காலமோ அவ்வளவு காலத்திற்குள் சுருக்கமாகப் பாடங்களை நடத்த வேண்டும்.

2. ஹரி ஜனங்களின் உதவி கிடைக்குமானால், அதைப் பெற்றுக்கொண்டு அவர்களுடைய சேரிகளைச் சுத்தமாகச் செய்து வைக்கலாம்.

3. சேரிக் குழந்தைகளை பக்கத்துக் கிராமங்களுக்கு அழைத்துக் கொண்டுபோய், அடுத்தாற் போலுள்ள ஊர்கள், நதிகள், அவைகளைப் பற்றிய சரித்திரங்கள் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கலாம்.

4. இராமாயணத்தினின்றும், மகா பாரதத்தினின்றும் சின்னச் சின்னக் கதைகளைக் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டலாம்.

5. சிறிய பஜனைப் பாட்டுகளைச் சொல்லிக் கொடுக்கலாம்.

6. ஏழைக் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்து வைப்பதோடு, பெரியோர்களுக்கும் சிறியோர்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றி சொல்லிக் கொடுக்கலாம்.

7. எந்தெந்த சேரியில் எத்தனை எத்தனை பேர் குடி யிருக்கின்றனர் போன்ற விஷயங்களையும், அவர்கள் வாழ்க்கை எவ்வாறிருக்கின்றனவென்றும் கணக்கு எடுக்கலாம்.

8. வியாதியால் அவஸ்தைப் படுபவர்களுக்கு மருந்து முதலியன கொண்டு போய்க் கொடுத்து உதவிகள் செய்யலாம்.

இவ்வாறு வேலை செய்யும் மாணவர்கள், தாங்கள் செய்த வேலைகளைப்பற்றி ஆங்காங்குள்ள ஹரிஜன சேவா சங்கத்திற்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்க வேண்டு மென்பதையும் நினைப்பூட்டுகின்றேன்.

—'ஹரிஜனம்'.

தோட்டி வேலை செய்யும் பி. ஏ.

ராமானந்த சந்யாசிக்கு வயது 30 இருக்கலாம். ஒரு ஷர்ட்டும், காக்கி அரை நிஜாரும், பாதக் கட்டையும் அணிந்து கொண்டிருக்கிறார். இந்திய இளைஞர்களுக்கு உடல் உழைப்பின் சிறப்பைப் போதிப்பதற்காக அவர் தோட்டி வேலை செய்து கொண்டிருக்கிறார். காந்திஜியின் சீடரான ஸ்ரீயுத தக்கர், அவரை டெல்லியில் சந்தித்து சம்பாஷித்ததை விவரமாக 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதி யிருக்கிறார்.

"எனது தாயார் என்னை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று படிக்க வைத்தாள். ஐ.ஸி.எஸ். காரனாகவோ பாரிஸ்டராகவோ ஆக்க வேண்டுமென்பது அவள் ஆசை. ஆக்ஸ்போர்ட் கலாசாலையில் பி.ஏ. பட்டம் பெற்றவுடன் நான் பத்திரிகைத் தொழிலை ஏற்று ஐரோப்பா முழுதும் சுற்றிவிட்டு 5 வருடத்துக்கு முன்னேதான் இந்தியா திரும்பினேன்.

"அநேக இந்திய இளைஞர்கள் கையால் உழைத்து ஜீவிப்பதை அகௌரவமென எண்ணிக் கொண்டிருக்கின்றனர். கையால் உழைத்துச் சாப்பிட சங்கோஜப் படுபவன் பட்டினி கிடக்க வேண்டியவனே! நமது இளைஞர்களுக்கு நல்வழி காட்ட விரும்பினேன். பம்பாய்த் தெருக்களில் போகிற வருகிறவர்களின் பூட்ஸுகளுக்கு வர்ணம் பூசி வயிறு வளர்க்க ஆரம்பித்தேன். பிரதிதினமும் இரண்டு மூன்று ரூபாய் கூலி கிடைத்ததுண்டு. பிறகு டெல்லிக்கு வந்தேன்.

"ஒரு நாள் கிழிந்த ஆடை யுடுத்திக்கொண்டு முனிஸிபாலிட்டிக்குப் போய் "சாமி! தோட்டி வேலை காலியா யிருக்குதா?" என்று கேட்டேன். மாதம் 13 ரூபா சம்பளத்திற்கு இந்த வேலை கிடைத்தது. நான் குடியிருக்கும் அறைக்கு 4 ரூபா வாடகை. சாப்பாட்டுக்கு 4 ரூபா தான் செலவு; தினசரிப் பத்திரிகைகளை வாங்கி ஹரிஜன சகோதரர்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். ஒரு இராப்பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கிறேன். இரண்டு அனாதைக் குழந்தைகளை வளர்த்து வருகிறேன்" என்று ராமானந்த சந்யாசி கூறினார்.

டெல்லியிலுள்ள ஏழை மக்கள் இவரை 'ஸ்வாமிஜி' என்று வெகு பிரியமாகப் போற்றி வருகின்றனர். ஆக்ஸ்போர்டு பி.ஏ. பட்டத்தை வீசி யெறிந்துவிட்டு, நமது இளைஞர்களுக்கு நற்புத்தி புகட்ட வழி காட்டிய இந்தத் தியாகி நீடூழி வாழ்க!

பாக்கு வெட்ட என்ஜினா?

எதற்காக இந்தியாவில் பிரமாதமாக இராணுவச்செலவு செய்கிறார்கள்? 1914-ம் வருஷத்துக்கு முன்னே, "ருஷியா படை யெடுத்துவிடும். அதற்காக தற்காப்பு நிமித்தம் இந்தியாவில் இவ்வளவு இராணுவம் வேண்டி யிருக்கிறது" என்று சொன்னார்கள். ஆனால் இந்தியாவைப் படையெடுக்க வேண்டுமென ருஷியாவுக்குத் துளிக்கூட அப்போது எண்ணமிருக்கவில்லை. "பிற நாட்டில் ஒரு அங்குலம் பூமி கூட எங்களுக்கு வேண்டாம். எங்கள் ருஷியாவிலும் ஒரு அங்குலத்தைப் பிறருக்குத் தர மாட்டோம்" என்று ருஷியாவின் தலைவனான ஸ்டாலின் சொல்லி யிருக்கின்றான். ஆகவே ருஷியாவைப் பற்றி இந்திய சர்க்கார் பயப்படக் காரண மில்லை.

ஜப்பான், அமெரிக்கா முதலிய அரசாங்கங்களுக்கு சீனா மீது கண் இருக்கிறதே யன்றி இந்தியாவைப் பற்றிக் கவலையே யில்லை. பிரான்ஸு, இத்தாலி முதலிய ராஜாங்கங்களுக்கு ஆப்பிரிக்காவில் இடம் பிடிப்பதில் தான் ஆசை யிருந்து கொண்டிருக்கிறதேயன்றி இந்தியாவைப் பற்றிக் கவலைப்படவே யில்லை.

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள ஜாதியார்கள் படை யெடுப்பார்களோ, ஆப்கன் அரசாங்கம் படை யெடுக்குமோ என்றும் சந்தேகப்படலாம். ஆனால் அமீருக்கு அவ்வப்போது பணம் தரப்பட்டு வருவதால் அவர் படை யெடுக்க மாட்டார். தமது நாட்டைச் சீர்திருத்துவதில் தான் அவருக்கு சிரத்தை. எதுவாயினும் 26 லக்ஷம் ஸோல்ஜர்களையும், சிப்பாய்களையும் வைத்து இவ்வளவு பெரிய இராணுவத்தை இந்திய கவர்ன்மெண்டு ஏன் தீனி போடுகிறது? ஆப்கன் காபுராவைத் தடுக்க இவ்வளவு பெரிய இராணுவம் இந்தியாவுக்கு ஒரு போதும் தேவை யில்லையே!

சாதாரண கொட்டைப் பாக்கை உடைப்பதற்காக ஒரு பெரிய என்ஜினையும் மெஷினையும் ஒருவன் வாங்குவானானால், ஒன்று அவன் பித்தம் பிடித்தவனென்றோ அல்லது வேறு ஏதோ காரியத்துக்காக அந்த என்ஜினை வாங்கியிருப்பானென்றோ நாம் சொல்லி விடலாம். 'இந்திய கவர்ன்மெண்டு பித்தம் பிடித்ததல்ல' என்று நாம் சுலபமாகச் சொல்லி விடலாம். ஆகவே........

'டெலிஸ்கோப்' காந்தி

மனிதனின் உணவு, ஆரோக்கிய விதி, இயற்கை வைத்தியம் முதலிய விஷயங்களில் மகாத்மா ஒரு பெரிய ஆராய்ச்சிக்காரர். இந்தத் தடவை எரவாடாவில் அவர் இன்னொரு விஷயத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கின்றார். இரண்டு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் சிறைக்குள் மகாத்மாவின் முற்றத்தில் வைக்கப்பட்டுள. அவைகளின் உதவியால் வான சாத்திரத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென நமது முனிவருக்கு ஓர் மோக மேற்பட்டிருக்கிறது. இந்தப் படிப்பின் பயனாக உலகினருக்கு என்னென்ன புதிய விஷயங்களை மகாத்மா கற்றுக் கொடுப்பாரோ, யார் கண்டது? தம்மைப் பேட்டி கண்ட ஓர் நிருபரிடம் அவர் பேசியபோது கூறியதாவது:

"வானத்தை ஆராய்வது விந்தை மிகுந்த படிப்பாகும். இரவில் ஆகாயத்தில் கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் பளிச்சிட்டுக்கொண்டிருக்கும்போது அவைகளை . அண்ணாந்து பார்த்தால், என்ன விந்தை! என்ன ஆச்சரியம்! எல்லையற்றதான ஆகாச வெளி; அதில் ஏராளமான கிரகங்களின் பவனி; இவைகளைக் காணும்போது ஈசுவரனுடைய வல்லமை புலனாகின்றது. அவரது ஸர்வக்ஞத்துவம் வெளிப்படையாகத் தெரிகிறது. இவைகளை யெல்லாம் காணும்போது எனது மனம் ஆண்டவன் பாதத்தை நாடி ஓடுகிறது. ஆனந்த பரவச முண்டாகிறது. ஆச்சரியம்! பேராச்சரியம் ஏற்படுகிறது" என்று கூறினர்.

முழத்துண்டு அணிந்த காந்தி யென்றும், பொக்கைப் பல் காந்தி யென்றும், ஆட்டுப்பால் காந்தி யென்றும், பட்டினி கிடக்கும் காந்தி யென்றும், கடவுள் பித்தன் காந்தி யென்றும் பலவாறு காந்திஜிக்குப் பட்ட மிருப்பதுபோல இனி 'டெலிஸ்கோப் காந்தி' யென்ற பெயரும் காந்திஜிக்கு கிடைத்து விடும். பல்லாயிரக் கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள கிரகங்களைக் காண்பதற்கு 'டெலிஸ்கோப்' என்ற தூரதிருஷ்டிக் கண்ணாடி உபயோகிக்கப்படுகின்றது. ஆனல் காந்திஜியின் மூளையே ஒரு டெலிஸ்கோப்தான்! பல்லாயிர வருடங்களுக்கு முன் நமது மூதாதையர் இருந்த வாழ்வு, ஆயிரம் வருடங்களுக்குப் பின் நமது சந்ததியார் இருக்கப் போகும் வாழ்வு இரண்டையும் ஆராய்ந்தறியும் வன்மை யுடையது அவருடைய மூளையே யன்றோ! வாழ்க அந்த மூளை!

பெண்டாட்டியாத்தே பெரியாத்தே!

ஒரு நண்பர் தனது பெண்டாட்டியைப்பற்றி வருணித்தார். அகமுடையானிட மிருந்து பணம் வேண்டும் போதெல்லாம் அவள் ஒரு சூழ்ச்சி செய்வாளாம். "நான் பிறந்த வீட்டுக்குப் போகிறேன்" என்று முறைத்துக் கொள்வாளாம். சரி, போகட்டு மென்று அனுமதித்தால், அகமுடையானிடமிருந்து தனது செலவுக் கென்று பணம் பறித்துக் கொண்டு போய் விடுவாளாம். போக வேண்டாமென்று தடுத்து 'தாஜா' பண்ணினலோ, ஏதாவதொரு புதிய நகை வாங்கிக் கொடுத்தே யாகவேண்டு மென்று சொல்வாளாம். இப்படியாக எந்த விதத்திலும் பணம் பறிப்பதில் அந்தப் பெண்டாட்டி கெட்டிக் காரியா யிருந்தாளாம்.

இந்த அகமுடையான் ஸ்திதியிலே இன்றைக்கு வரி செலுத்தும் இந்தியன் இருக்கின்றான். ஆனல் இந்தியாவுக்கு புதிய அரசியல் கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி, ஐ. ஸி. எஸ். காரர்களுக்கு மட்டும் எப்போதும் எந்த விதத்திலும் வரும்படி கிடைத்துக் கொண்டு தானிருக்கிறது.

மாண்டேகு சீர்திருத்தம் வந்த போது ஐ. ஸி.எஸ். காரர்களுக்கு 'வீதாசாரமாக பென்ஷன்' தருவதுபற்றி பிரஸ்தாபம் நடந்தது. இப்போது புதிய அரசியல் வரப் போவதற்குமுன் இந்த பென்ஷன் பிரசாதத்தைப் பற்றி, மறுபடி பேச்சு நடக்கிறது. இந்தியாவுக்கு ஏதாவது கிடைத்தாலும் ஐ. ஸி. எஸ். காரனுக்கு வரும்படி; கிடைக்கா விட்டாலும் அவனுக்கு வரும்படி தான்! அட விந்தையே!

—அமிர்த பஜார் பத்திரிகை.

ஹோரின் துரதிர்ஷ்டம்

இந்தியா மந்திரியாக உள்ள ஸாமுயேல் ஹோருக்கு 'நார்போக்' என்ற பிரதேசத்தில் பூஸ்திதி உண்டு. அவரது நிலங்கள் உழுது தயாரா யிருந்தனவாம். திடீரென்று அருகே யிருந்த மலை இடிந்து புரண்டு விழுந்து விட்டதாம். லக்ஷக் கணக்கான டன் எடையுள்ள கல்லுகளையும் கட்டிகளையும் எப்படி அப்புறப் படுத்துவது? ஆகவே ஸாமுயேல் ஹோரின் துரதிர்ஷ்டம், பரம நஷ்டம் விளைவித்திருக்கிறது. இந்திய ஜனங்களுக்குப் போடுவது போல ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு அந்த மலை இடிந்து விழாதபடி ஸாமுயேல் ஹோர் தடுத்திருக்க லாகாதா?

கல்கத்தா காங்கிரஸ்

எவ்வளவோ தடபுடல்களுக் கிடையே கடைசியாக எஸ்பிளனேட்டிலுள்ள டிராம்வேக் கொட்டகையில் ஸ்ரீமதி நெல்லி சென் குப்தா வின் அக்கிராசனத்தின் கீழ் கல்கத்தா காங்கிரஸ் கூடிற்று. போலீசார் வியூகம் வகுத்து தடிப் பிரயோகம் செய்தும் வந்திருந்தவர்கள் நகரவே இல்லை. குதிரைப் படைகளும், காலாட் படைகளும் மிகவும் ஆர்ப்பாட்டம் செய்தன. தலைமைப் பேச்சு முடியு முன்னமே கொட்டகையிலிருந்தவர் எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

காங்கிரஸ் தலைவி கைதியான பிறகு ஸ்ரீமதி வஸந்தி தாஸ் பேச வாரம்பிக்கவே, அவளும் கைது செய்யப்பட்டாள். ஷை கூட்ட சம்பந்தமாக 240 பேர்கள் வரையில் கைது செய்யப்பட்டனராம். இதற்கிடையே இன்னொரு இடத்தில் சிந்துத் தலைவர் 'பதக்' தலைமையின்கீழ் காங்கிரஸ் கூடி தீர்மானங்கள் நிறைவேறின. தேசியக் கொடி உயர்த்தப்பட்ட போது போலீஸார் வந்து கூட்டத்தைக் கலைத்தனர். 12 ஸ்திரீகளும் கைதியாயினர். காங்கிரஸிற்கு வந்திருந்த மொத்தப் பிரதிநிதிகள் 2200 பேர்களாம்.

சட்ட விரோதமென அறிவிக்கப்பட்டிருந்த வரவேற்புக் கமிட்டியின் வேலையைச் செய்ததற்காகவும், அநுமதி யில்லாமல் ஊர்வலம் சென்றதற்காகவும் 5 பேர்களுக்கு தலா 3 மாதம் தண்டனை. துண்டுப் பிரசுரம் 1000 வைத்திருந்ததற்காகவும் மூவருக்கு தலா 3 மாதம். ஆமதாபாத் காங்கிரஸ் காரியதரிசி அர்ஜுன லாலா என்பவர் எல்லையை விட்டுப் போகக் கூடாதென்ற உத்திரவை மீறியதற்காக ஒரு வருஷமும் 75. ரூ. அபராதமும்.

விடுதலை

காங்கிரஸ் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களில் 37 ஸ்திரீகள் உள்பட 171 பேர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.

வெள்ளி யன்று கைது செய்யப்பட்ட பண்டித மாளவியா, கிருஷ்ணகாந்த மாளவியா, ஸ்ரீதர மாளவியா, ஸி. பி. குப்தா, ஸ்ரீமதி நேரு முதலியவர்கள் விடுதலை செய்யப்பட்டு. உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட்டனர்.

காங்கிரஸ் தீர்மானங்கள்

பூரண சுதந்திரமே காங்கிரஸின் நோக்கமென்றும், சட்ட மறுப்பு, அந்நியச் சாமான் பகிஷ்காரம் முதலிய திட்டங்களை உறுதி செய்தும், கல்கத்தா காங்கிரஸில் தீர்மானங்கள் நிறைவேறினவாம். சர்க்கார் அடக்கு முறையைக் கண்டித்தும், வெள்ளைக் கடுதாசியைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறினவாம்.

கள்ளக்குறிச்சிக் கருகில் பல கிராமங்களில் பிரசங்கம் செய்ததற்காக 6 பேர்களுக்குத் தலா 6 மாதம் தண்டனை. கள்ளிக்கோட்டையில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ஒருவர் கைதி.

கோவில்பட்டியில் கோர்ட்டு நடத்திய தொண்டர்களுக்கு இரண்டு குற்றங்களுக்குமாக தலா ஒரு வருஷம். குருவாயூர் தொண்டர் கோபாலனுக்கு 22 மாதம் கடுங்காவல்.

கள்ளிக்கோட்டைக் கருகில் ஸ்ரீ நாராயணன் கோவிலை எல்லாப் பொது ஜனங்களுக்கும் திறந்து விடாத வரையில், சாகும் வரை பட்டினி கிடப்பேனென்று விரதமிருந்த ஸ்ரீ பந்துவைக் கைது செய்தனர்.

பொது ரஸ்தா, கிணறு, மார்க்கெட்டு முதலிய விடங்களை எல்லா ஜாதியினரும், மதத்தினரும், உபயோகிக்கலா மென்றும், தடை செய்பவர்கள் 50 ரூ. வரையில் அபராதம் விதிக்கப்படுவார் என்றும் மத்திய மாகாண சட்ட சபையில் தீர்மானமானதை கவர்னர்-ஜெனரலும் அங்கீகரித்து விட்டார்.

அகரமாங்குடி ஹரி ஜன சேவா சங்கத்தார் ஆரியங்காவல் ஹரி ஜனங்களுக்கு ஒரு கேணியை ரிபேர் செய்தும், உச்சிமேட்டில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியும், புரசக்குடியில் ஒரு புதிய கிணறும் வெட்டி யிருக்கிறார்கள்.

கோயமுத்தூரில் கதர் கண்காக்ஷி ஏப்ரல் 12உ முதல் 20உ வரையில் நடக்கும். டாக்டர் சுப்பராயன் திறந்து வைப்பார்.

ஐதராபாத் சமஸ்தானத்தில் 5 வயதுக்குட்பட்ட 5366 விதவைகளும்; 5 வயதுக்குட்பட்ட 2343 தார மிழந்த பையன்களு மிருக்கின்றார்களாம்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.